கிறதோ அதையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு பாலங்கள் கட்டவெண்டுமென்று திட்டங்களை வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே அரசு இதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சாலையினுடைய முக்கியத்தையும் இந்த அரசு நன்றாக அறியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 271, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

271—

புத்தூர் மலைக்குச் செல்லும் கிராமச் சாலையைப் பழுது பார்த்தல்.

* 11808—திரு. தி. சாத்தையா :

மாண்புமிகுபொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் தொகுதி, புத்தூர் கிராமத்திலிருந்து புத்தூர் மலைக்குச் செல்லும் கிராமச் சாலையைப் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி கேட்டேன். 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதிக்குள் இந்த ரோடை அமைத்துக் கொடுத்து நல்லபடியாக இப்பொழுது பஸ்கள் போய்க் கொண்டிருக்கின்றன. இதை நல்லபடியாகச் செய்து கொடுத்த புரட்சித் தலைவியின் அரசுக்கும், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும் எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த ரோடு கன்ஸ்டிரக்ஷன் மெத்தேடில் (Whether our Government will come forward . . . . . . . . . . . . . . . .

1993 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாக இருக்கவேண்டும். உறுப்பினர்களும் கேள்வியாகக் கேட்க வேண்டும், அமைச்சர்களும் அதற்கு நேரிடையாகப் பதில் சொல்ல வேண்டும், அப்படிச் சொன்னால்தான் நாம் ஒரு மணி நேரத்திற்குள் 20 கேள்விகளை முடிக்க முடியும். நீங்கள் எல்லா விளக்கங்களையும் இதிலே சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். பழுதுபார்க்கப் படுமா என்று கேட்டிருக்கிறீர்கள், அதை நேரிடையாகக் கேளுங்கள்.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, while stan..r.is,ng the Road constructi.n, number of vehicles, types of vehicles, width of the ro..., stra.ghtness of the road— இதுபோன்ற கருத்துக்களை மனதில் வைத்து எதிர்காலத்தில் ஒரு தொலைநோக்குப் பார்வையோடு இந்த ரோடுகளை அமைத்தால்—இதை அமைக்கும்போது மேற்கூறிய கருத்துக்களை பரிசீலித்து அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை நெடுஞ்சாலைத் துறையிலே சேர்க்கப்படவில்லை. இந்த மாநிலத் திட்டம் ஏதும் இல்லை என்று சொல்லியிருந்தேன். இதன் நீளம் 1.5 கி.மீ. இருக்கின்ற காரணத்தால் இது உள்ளாட்சி மன்றத்தின் சார்பாகவோ அல்லது ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாகவோ அமைத்திருப்பார்கள் எங்களுடைய துறையைப் பொறுத்தமட்டில் இந்தச் சாலை நெடுஞ்சாலைத் துறையில் இல்லை. ஆகவே, இந்தச் சாலை அமைக்கப்பட்டிருந்தால் மிக்க நன்றி, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பொறியாளர் என்ற அடிப்படையிலே சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். சாலைகளை அமைக்கின்றபோது, செல்லுகின்ற வாகனங்களின் எண்ணிக்கை அந்தச் சாலைகளின் அகலம். கீழே அதை பலப்படுத்துவதற்கு ( an ulation ) என்று சொல்லுகின்ற உயர்வு-தாழ்வு வந்துவிடாத அளவுக்குச் சாலைகளை அமைக்கின்ற பணி இருக்க வேண்டும் என்றெல்லாம் மேலான யோசனையைத் தெரிவித்தார்கள். இதையெல்லாம் கருத்திலே வைத்துத்தான் அங்கே ( soil ) மோசமாக இருக்கிறது என்றால் அந்தப் பகுதியிலே எப்படி சாலை போடுவது, ( Granvel ) லே எப்படிச் சாலை போடுவது ( plant ) போடுவது என்று அதிகாரிகள் கணக்கு வைத்திருக்கிறார்கள். நான் ஏற்கனவே சொன்னதைப்போல இந்தத் துறையில் பல்வேறு அனுபவம் உள்ள அதிகாரிகள் (Design Department) லே இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டாம். மிக நுணுக்கமாக, நல்லமுறையிலே சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்பதை உறுப்பினர் அவர்களும் நன்கு அறிவார்கள். ( Plan ) வைத்துச் செய்து கொண்டிருக்கிறோம். புதிய

முறைகளைப் புகுத்தியிருக்கிறோம். அகவே, அவர்களுடைய மேலான யோசனையையும் இந்த அரசு கருத்தில் கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... ... ... . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள்தான் ஏற்கனவே பேசிவிட்டீர்களே, இது ஹைவேசில் இல்லை, உள்ளாட்சித் துறையில் இருக்கிறது என்று இருந்தாலும், நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறார்.

வினா எண் 272 திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

272—

கிருட்டிணகிரி நகருக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கல்.

*10577—திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருட்டிணகிரி நகரில் போதுமான அளவு குடிநீர்வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது எவ்வளவு மதிப்பீட்டில் நிறைவேறும்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி நகரமானது தர்மபுரி மாவட்டத்திலே மிகப் பெரிய நகரமாகும். 20 ஆண்டுகளுக்கு முன்பு இணைக்கப்பட்ட தண்ணீர் வசதிதான் இருக்கிறது. 100 பேர்களுக்கு 50 விழுக்காடுதான் தண்ணீர் கொடுத்துக் கொண்டு வருகின்றோம். மேலும் அருகிலே இருக்கின்ற டயரிக்கு இங்கே வருகின்ற நகராட்சி தண்ணீரை 1 லட்சம் லிட்டரை ஒவ்வொரு